ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1656/25 - 2010 ජූනි 02 වැනි බදාදා - 2010.06.02
*1656/25 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2009 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இறுதியாக திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் அதிகாரத்தின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருட்கள் தொடர்பாக 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் உற்பத்தி வரி செலுத்துவதிலிருந்து வரிவிலக்களிக்கப்பட்டுள்ளதாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

2005, மே மாதம் 5 ஆந் திகதிய 1391/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் 2007, ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதிய 1492/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் மற்றும் 2008 நவெம்பர் மாதம் 6 ஆந் திகதிய 1574/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2009 மாச்சு 4 ஆந் திகதிய 1591/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலமும் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டளைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1,
2010, யூன் 01.

**அட்டவணை I**

1. **இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் :**

(அ) வெளிநாட்டு தூதுவராலயங்களில் கடமையாற்றும் இலங்கை இராஜதந்திரியொருவரினால் 2000.04.07 ஆந் திகதிய 165 ஆம் இலக்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கையின்படி இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனங்கள் ;

(ஆ) இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் செய்து கொண்ட பல்வேறு உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனங்கள்;

(இ) அரச அலுவலரொருவரினால் 1999.10.08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதற்கு செய்யப்பட்ட திருத்தங்களுக்கு ஏற்ப இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனங்கள் ;

(ஈ) நாட்டுக்காக அளப்பரிய சேவையினை வழங்கியுள்ளார் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் சான்றுப்படுத்தப்பட்ட எவரேனும் ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் ;

(உ) இலங்கை தேச கட்டுமான முறியின் ஆரம்ப உரிமையாளரினால் திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கைக்கு ஏற்ப சலுகை அடிப்படையிலான வரி வீதத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனங்கள்.

2. அரசாங்கத்தின் விசேட கட்டளையின் மூலம் திறைசேரிச் செயலாளரினால் வழங்கப்படும் அனர்த்த மற்றும் மீள் கட்டமைப்பு தொடர்பான விசேட கட்டளைகளுக்கு அமைவாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்.

3. கைத்தொழிற்துறை அமைச்சரினால் சிபாரி செய்யப்பட்ட 30% க்கு குறையாத பெறுமதி சேர்ப்புடன் புதிய வாகன உதிரிப்பாகங்களைப் பொருத்தி உள்ளூரில் பொருத்தப்பட்ட/தயாரிக்கப்பட்ட வாகனங்கள், எனினும் இ. ப. இலக்கம் 87.03 இன் பிரகாரம், இந்த விலக்களிப்பு மேலே விடயம் (3) இல் உரித்துடைய நிபந்தனைகளுக்கு அமைய 11 ஆவது அட்டவணையில் காண்பிக்கப்பட்ட இ. ப. இலக்கத்தின் கீழ் உட்படுகின்ற வாகனங்களுக்கு மட்டும் உரித்துடையதாகும்.

4. கைத்தொழில் துறை அமைச்சரினால் சிபாரிசு செய்யப்பட்ட 30% க்கு குறையாத பெறுமதி சேர்ப்புடன் உள்ளூர் தேவைக்காக பொருத்தப்பட்ட உற்பத்தி செய்யப்படுகின்ற இ. ப. இல. 84 மற்றும் 85 ஆகிய தலைப்புகளுக்கு உட்படுகின்ற பொருட்கள்.

5. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 107 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள பயணிகளின் பிரயாண மூடைகள் (விலக்களிப்புக்கள்) ஒழுங்கு விதிகளின் கீழ் தீர்வையின்றி அப்புறப்படுத்துவதற்கு உரித்துடைய பொருட்கள் யாவும்.

6. கப்பல் இருப்புப் பொருட்களாக அல்லது மீள் ஏற்றுமதிக்காக உபயோகிப்பதற்கு பிணையிலிருந்து விலக்களிக்கப்பட்ட பொருட்கள்.

7. இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவைகளும் இலங்கையினுள் எந்த ஏற்றுமதியாளருக்கும் வழங்கப்பட்டவைகளும் அத்தகைய உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்பது பற்றி உற்பத்தி வரிப் பணிப்பாளர் அதிபதி திருப்தியுறும் வண்ணம் போதிய அளவு சான்று வழங்கப்பட்டுள்ளவைகளுக்குமான பொருட்கள் யாவும்.

8. திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரத்துடன் பதிவு செய்யப்பட்ட மலர்ச்சாலைகளினால் இறக்குமதி செய்யப்பட்ட பிரேத வாகனங்கள்.

9. அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தொடர்பில் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பேரில் இறக்குமதி செய்யப்படும் மற்றும் கொள்வனவு செய்யப்படும் வாகனங்கள்.

## அட்டவணை II

**பெற்றோல் வாகனங்கள் :**

| இ. ப. த. பெ. (1) | இ. மு. குறியீடு (2) | விபரம் (3) |
|---|---|---|
| 87.03 | | ஸ்ரேசன் வெகன் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலாக, பிரதானமாக பிரயாணிகளது போக்குவரத்துக்காக வடிவமைக்கப்பட்ட (87.02 ஆம் தலைப்பிலக்கத்திலானவை தவிர) மோட்டார் காரர்கள் மற்றும் பிற மோட்டார் வாகனங்கள். |
| | 8703.21 | உருளைக் கொள்ளளவானது 1,000 சி. சிக்கு மேற்படாதவை |
| | 8703.21.60 | ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலான மோட்டார் கார்கள், மூன்றரை வருடங்களுக்கு மேற்படாதவை. |
| | 8703.22 | உருளைக் கொள்ளளவானது 1,000 சி. சிக்கு மேற்பட்டவை ஆனால் 1,500 சி.சிக்கு மேற்படாதவை. |
| | 8703.22.50 | ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலான மோட்டார் கார்கள், மூன்றரை வருடங்களுக்கு மேற்படாதவை. |
| | 8703.23.51 | உருளைக் கொள்ளளவானது 1,600 சி. சிக்கு மேற்படாதவை |

**டீசல் வாகனங்கள் :**

| இ. ப. த. பெ. (1) | இ. மு. குறியீடு (2) | விபரம் (3) |
|---|---|---|
| | 8703.31 | உருளைக் கொள்ளளவானது 1,500 சி.சிக்கு மேற்படாதவை |
| | 8703.31.70 | ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலான மோட்டார் கார்கள், மூன்றரை வருடங்களுக்கு மேற்படாதவை. |
| | | ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலாக, மோட்டார் கார்கள், உருளைக் கொள்ளளவானது 2,000 சி. சிக்கு மேற்படாதவை, மூன்றரை வருடங்களுக்கு மேற்படாதவை. |
| | 8703.32.51 | உருளைக் கொள்ளளவானது 1,600 சி. சிக்கு மேற்படாதவை. |
| | 8703.32.59 | பிற |

**அட்டவணை** II *(தொடர்ச்சி)*

**டீசல் வாகனங்கள் :**

| இ. ப. த. பெ. (1) | இ. மு. குறியீடு (2) | விபரம் (3) |
|---|---|---|
| | 8703.32.71 | அதிக பாரத்தைத் தாங்கும் படிமுறை வகை (டெலர் டைப்) அடிச்சட்டம் மீது முடிச்சு மூலம் பொருத்தப்பட்ட மொனோ கொக் அல்லாத (பாகங்கள் இணைக்கப்படாது) பாகமுடையதும், நிரந்தரமாக நாலு சில்லுகளும் இயந்திரம் மூலம் இயங்கக்கூடிய மற்றும் கிலோ கிராமுக்கு கூடிய பாரத்தை (நபர்களையும் பொருட்களையும்) சுமக்கத்தக்க சாரதி அடங்கலாக 7 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் (வயது வந்தவர்கள்) பயணிப்பதற்கான வாகனங்கள். |
| | 8703.32.79 | பிற. |

6- 410

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.